மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

3. அறிவிப்புகள்-தொடர்ச்சி

(உ) உறுப்பினர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அளிக்கவிருக்கும் விருந்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு முதலமைச்சர் அளிக்கும் விருந்தில் கலந்துகொள்ள ஏதுவாக இன்று மாலை சட்டமன்றப் பேரவைக் கூட்டம் முடிந்தவுடன் உறுப்பினர்கள் இங்கிருந்து நேராக தாஜ் கொரமண்டல் ஓட்டலுக்குச் செல்ல பேருந்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன. (குறுக்கீடு)

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே மிகப் பெரிய வறட்சி இன்று நிலவிக் கொண்டிருக்கின்றது. இந்த நேரத்திலே இப்படிப்பட்ட ஒரு விருந்து தேவைதானா என்பதை முதலமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஹேமச்சந்திரன், முதலமைச்சர் அவர்கள்—இது எல்லா உறுப்பினர்களும் கொஞ்சம் கலந்து, ஒன்றாகப் பழக வேண்டும் என்பதற்காக செய்யப்படக் கூடியது. விருந்தாக அல்ல. எல்லோரும் கலந்து பேச வேண்டும் என்பதற்காகத்தான்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

பிற்பகல் 1-35

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஆண்டும் சட்டமன்ற உறுப்பினர்களை கௌரவித்து ஒரு முறை மேதகு ஆளுநர் அவர்களும் பின்னர் பட்ஜெட் செஷன் முடியும்போது முதலமைச்சரும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு விருந்தளிப்பது பல ஆண்டுகளாக இருந்து வருகின்ற ஒரு மரபாகும். ஆனால் தமிழகத்தில் இருக்கின்ற அசாதாரணமான நிலைமை அதாவது, வறட்சி, நிதி நெருக்கடி, இவற்றையெல்லாம் கருதித்தான் 2001-ல் புதிதாக இந்தச் சட்டமன்றம் அமைந்த பின்னரும், புதிதாக இந்த அரசு ஆட்சி பொறுப்பேற்ற பின்னரும்கூட நான் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு விருந்தளிக்கவில்லை. அதைப்போலவே 2002 ஆம் ஆண்டில்கூட சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நான் விருந்து அளிக்கவில்லை. காலங்காலமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகின்ற இந்த மரபை அடியோடு விட்டுவிடக்கூடாது என்பதற்காகத்தான் இந்த முறை, இந்த ஆண்டு சட்டமன்ற உறுப்பினர்களுக்காக நான் விருந்து ஏற்பாடு செய்திருக்கிறேன். ஆகவே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், குறிப்பாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நான் அவர்களை கௌரவிப்பதற்காக ஏற்பாடு செய்திருக்கின்ற இந்த விருந்தில் நல்ல மனதோடு கலந்துகொள்ள வேண்டும். இந்த விருந்து அளிப்பதையே கொச்சைப்படுத்தக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன.

பேரவை மீண்டும் பிற்பகல் 4-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-36 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

பிற்பகல் 4-30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.*

(ஊ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.